(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **101**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 செப்தெம்பர் 21, புதன்கிழமை பி.ப.1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ திலும் அமுனுகம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ திலக் மாரபன

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ ச. வியாழேந்திரன்

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. நீல் இத்தவல, பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) உள்நாட்டலுவல்கள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பெறுபேற்று அறிக்கையும் கணக்குகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான தேசிய லொத்தர் சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சர், 2011 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் ஆண்டறிக்கையும் கணக்குகளையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்:** (1) போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சமல் ராஜபக்ஷ, போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்திய "2012 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை", "2015 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிறைவேற்று அறிக்கை", "2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் ஆண்டறிக்கை", "2012 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டு அறிக்கை", "2011 ஆம் ஆண்டுக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் ஆண்டு அறிக்கை", "2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் செயற்சாதனை அறிக்கை" மற்றும் "2014 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட விமானநிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் வருடாந்த அறிக்கை"ஆகிய விடங்கள் தொடர்பிலான அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) கல்வி மற்றும் மனிதவளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ வடிவேல் சுரேஷ், கல்வி மற்றும் மனிதவளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்திய " பல்கலைக்கழகங்கள் (திருத்தம்)" எனும் சட்டமூலம்" , " 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ பிரிவின் கீழான ஒழுங்குவிதி" மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்" ஆகிய விடங்கள் தொடர்பிலான அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

(3) அரசாங்க நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன், அரசாங்க நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்திய "இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்" மற்றும் "சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்" பற்றிய பிரேரணை தொடர்பில், அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (5) இன் கீழான அறிக்கைகள்:** "சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்)" எனும் பெயரைக் கொண்ட சட்டமூலம் பற்றி பாராளுமன்ற நிலையியற் கட்டளை இல. 47 (5) இன் கீழ், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரின் அறிக்கையை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

சட்டமூலம் 2016 ஒக்தோபர் மாதம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்படுமாறு கட்டளையாயிற்று.

**4. மனுக்கள்:**

(1) (i) பத்தரமுல்ல, ஜயவடனகம, இல. 2பீ/41 இல் வதியும் திரு. எ.எல்.பி.எஸ். அபேதீரவினது 2016.05.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பிட்டிகல, பத்தினிகொடவில் வதியும் திரு. சிரில் ஜயசிங்கவினது 2016.06.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) காலி, ஆயுர்வேத வைத்தியசாலையில் சேவையாற்றும் டாக்டர் கே.ஏ.கே. நாணாயக்காரவினது 2016.05.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) காலி, ஸ்ரீ குணரத்ன மாவத்தை, இல. 38 ஏ யில் வதியும் திரு. கே.ஜி. ரத்னசிரியினது 2016.06.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) கட்டுனேரிய, "சியபத்த" வில் வதியும் திரு. எல்.ஏ.எப். வஸந்த பர்னாந்துவினது 2016.06.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) காலி, தலாபிட்டிய, பண்டாரநாயக்க இடம், இல. 30/1 இல் வதியும் திருமதி எம்.எச்.எச். ரிபாயாவினது 2016.08.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vii) காலி, சீன கொரட்டுவ, ஸ்ரீ தேவமித்த வீதி, இல. 77 இல் வதியும் திரு. பி.கே. அதுலவினது 2016.07.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(viii) நாவலப்பிட்டிய, ஹபுகஸ்தலாவ, ஹல்கொல்லவத்தவில் வதியும் திரு. எஸ்.எம்.எல்.எஸ். சிரிவர்தனவினது 2016.07.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ix) காலி, தல்பே, கந்தெவத்த, ஹீனட்டிகல தெற்கில் வதியும் திரு. யூ.கே. விஜேசிரியினது 2016.07.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(x) காலி, போப்பே, வேகுணுகொட ஒழுங்கை, "நிசாதி", இல. 13 இல் வதியும் திரு. டப்ளியூ.ஜி.எஸ். ஹரிஸ்சந்திரவினது 2016.06.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xi) ஹிக்கடுவ, வேவல, "தீபா" வில் வதியும் திரு. டப்ளியூ.டப்ளியூ.ஏ.எஸ். எஸ்.பி. பர்னாந்துவினது 2016.06.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ வஜிர அபேவர்தன சமர்ப்பித்தார்.

(2) அம்பலாந்தோட்டை, ஒலுவில, ரொட்டாவல வீதியில் வதியும் திரு. டப்ளியூ.எல்.பி. சனத்தினது 2016.06.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மஹிந்த அமரவீர சமர்ப்பித்தார்.

(3) அக்மீமன, இஹலகொட, இஹலவத்தவில் வதியும் திரு. எம்.ஜீ. சமரபாலவினது 2016.02.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நிஷாந்த முத்துஹெட்டிகமகே சமர்ப்பித்தார்.

(4) எல்பிட்டிய, குருந்துகஹஹெதெக்ம, எல்.எம்.பி. மாவத்தை, ''பீரிஸ் விலா'' வில் வதியும் திரு. ஏ.கே.ஜி. ஆனந்த சில்வாவினது 2016.07.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மனூஷ நாணாயக்கார சமர்ப்பித்தார்.

(5) (i) தெவினுவர, கப்புகம - மேற்கு, ''சரஸவி'' யில் வதியும் திரு. ஏ.ஜீ.ஆர். செனெவிரத்னவினது 2016.07.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) ஹபராதுவ, அமரவாஸவில் வதியும் திரு. ஜி.பி. அமரசேகரவினது 2016.07.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மாத்தறை, நூப்பே, இல. 13, வில்மட் பாலசூரிய மாவத்தை, தொழிலாளர் நியாய சபை - இல. 26 இல் வதியும் திரு. எம்.ஐ.எம். சாஹிரினது 2016.07.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) மாத்தறை, சுல்தானாகொட, கெகில்லவில் வதியும் திரு. எம்.எம்.ஏ. ருவன் குமாரவினது 2016.08.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) வெலிகம, பெனேடியான, மாரகஹஹேனவில் வதியும் திருமதி மஹகமகே சோமாவினது 2016.07.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

(6) புப்பிலிய, மாரகமுவ, இல. 19 இல் வதியும் திரு. பி.ஜி. சுதந்த பொடிபண்டாரவினது 2016.07.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "ஆலோகா சமூக சேவை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ எஸ்.எம். மரிக்கார் பிரேரித்தார். கௌரவ ( பேராசிரியர்) ஆசு மாரசங்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**6. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்** : பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சமர்பித்த பிரேரணை,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ.

தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்குரித்தான அமைச்சு செயலாளர் கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 2.58 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக” என பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.23 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

“கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்குவாராக” என அரச தொழில்முயறச்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.30 மணிக்கு கௌரவ எட்வட் குணசேகர தலைமை தாங்கினார்.)

(பி.ப. 6.03 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்** :பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:—

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியலமைப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு, 43 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய பாராளுமன்றம் பின்வருமாறு சார்பாக 68, எதிராக ஒருவரும் வாக்களிக்காது ஏற்றுக்கொள்ளப்பட்டது,

**8. ஒத்திவைப்பு :** ''இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக'' என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 6.37 மணிக்கு, 2016 மார்ச் மாதம் 08 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2016 செப்தெம்பர் 22 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.